**செய்தி வெளியீடு எண்: 713** **நாள்: 05.10.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (5.10.2018) தலைமைச் செயலகத்தில், இந்திய வானிலை ஆய்வு மையம் அரபிக் கடலின் தென் கிழக்கு பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகி இருக்கிறது என்றும், அதனை தொடர்ந்து நான்கு முதல் ஐந்து நாட்கள் வரை தமிழ்நாட்டில் ஆங்காங்கே கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும், குறிப்பாக 7.10.2018 அன்று சில இடங்களில் அதிதீவிர கனமழை (Extremely Heavy Rainfall) பெய்யக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுத்ததையொட்டி, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கீழ்கண்ட உத்தரவுகளை வழங்கினார்கள்:–

- ❖ இந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது, அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, பின்னர் புயலாக வலுவடையும் என்றும், 6.10.2018 முதல் தென் கிழக்கு மற்றும் மத்திய அரபிக் கடலில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் எனவும், ஏற்கனவே தென் கிழக்கு மற்றும் மத்திய அரபிக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் 5.10.2018–க்குள் கரைக்கு திரும்ப வேண்டும் என்ற இந்திய வானிலை ஆய்வு மைய எச்சரிக்கையினை கவனத்தில் கொண்டு கடலுக்குச் சென்றுள்ள அனைத்து மீனவர்களையும் தொடர்பு கொண்டு அவர்கள் உடனடியாக கரைக்குத் திரும்ப கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்கள் அனைவரும் கரைக்கு திரும்பிவிட்டார்களா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- ❖ வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக மாவட்ட நிர்வாகங்கள் மேற்கொண்ட ஆயத்த பணிகளை கண்காணிக்க மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்ட மூத்த இ.ஆ.ப. அதிகாரிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு உடனடியாக செல்ல வேண்டும்.
- ❖ கனமழை காலங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வராமல் பாதுகாப்பாக இருக்க வேண்டியும், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பத்திரமாக இருக்க

அறிவுறுத்த வேண்டியும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மேடான இடத்திற்கு அல்லது நிவாரண முகாம்களுக்கு செல்ல வேண்டியும், நீர் நிலைகளிலும், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் பகுதிகளிலும் பொது மக்கள் செல்பி (Selfie) எடுப்பதை தவிர்க்க வேண்டியும் மற்றும் விவசாயிகள் தங்களது கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்க வேண்டும் போன்ற தகவல்களை தண்டோரா, கேபிள் டிவி, ஊடகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் சமூக வலைதளங்கள் வாயிலாக பொது மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

- ❖ தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்புப் படையினர் மற்றும் தமிழ்நாடு அரசினால் கிராம அளவிலேயே கண்டறியப்பட்ட முதல் நிலை மீட்பாளர்கள் (First Responders) துணையுடன் மேடான பகுதிகளுக்கும், நிவாரண முகாம்களுக்கும் பாதுகாப்பாக அழைத்துச் சென்று தங்க வைக்க தகுந்த முன்னேற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
- ❖ நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட உள்ள மக்களுக்கு போதிய உணவு, சுத்தமான குடிநீர், குழந்தைகளுக்குத் தேவையான பால் பவுடர், மருந்துகள், சுகாதார வசதிகள், ஜெனரேட்டர், போர்வை மற்றும் துணிமணிகள் போன்றவற்றினை உடனடியாக வழங்கும் வகையில் தயார் நிலையில் வைக்க வேண்டும். இவை அனைத்தையும் ஒருங்கிணைக்க அரசு சார்பில் ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.
- ❖ நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படவுள்ள மக்களுக்கு முகாம்களிலேயே மருத்துவ பரிசோதனைகள் செய்ய போதிய மருத்துவ முகாம்கள் அல்லது நடமாடும் மருத்துவக் குழுக்களை ஏற்படுத்திட வேண்டும்.
- ❖ நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படும் குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டோர் ஆகியோர் மீது தனி கவனம் செலுத்திட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- ❖ பல்துறை அலுவலர்கள் கொண்ட 662 மண்டல குழுக்கள் (Inter Departmental Zonal Teams) பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் என கண்டறியப்பட்ட இடங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

- 1275 மாநில பேரிடர் மீட்பு படையினர், காவல் துறை மற்றும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தரைத்தளத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் வெள்ளத்தில் மூழ்காமல் இருக்கும் வகையில், அவற்றினை உயரமான இடத்திற்கு உடனடியாக மாற்றியமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், ஜெனரேட்டர்களுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் ஆக்ஸிஜன் சிலிண்டர்களை போதிய அளவில் இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.
- டெங்கு பரவாமல் தடுக்கும் வகையில், உள்ளாட்சி அமைப்புகளும், சுகாதாரத் துறையும் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மழைநீர் தேங்கும் இடங்களைக் கண்டறிந்து அந்நீரை உடனடியாக வெளியேற்ற வேண்டும். ஏடிஸ் கொசுக்கள் இல்லாத பகுதிகளாக மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் பொது இடங்களை பராமரிக்க வேண்டும்.
- மற்ற மாநிலங்களிலிருந்து தொற்று நோய்கள் தமிழ்நாட்டிற்கு பரவாமல் தடுக்க ஏற்கனவே உள்ள சோதனை சாவடிகளில் தேவையான தீவிர கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஏற்கனவே ஒவ்வொரு வியாழக் கிழமையும் தீவிர தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொள்ள உத்தரவிட்டிருந்த நிலையில், தற்போது வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, இப்பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு முடிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.
- 70 சதவீதத்திற்கு கூடுதலாக நிரம்பியுள்ள நீர்நிலைகளை தீவிரமாக கண்காணித்திட வேண்டும்.
- மேற்கு தொடர்ச்சி மலையினை ஒட்டியுள்ள மாவட்டங்களில் அதிக மழைப் பொழிவு எதிர்பார்க்கப்படுவதால், தனி கவனம் செலுத்தி அம்மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற மாநகராட்சிகளால் பராமரிக்கப்படும் சுரங்கப் பாதைகளில் தண்ணீர் உட்புகாமல் இருக்கும் வகையில், சுரங்கப் பாதைக்கு வெளியே சாலையின் குறுக்கே சிறிய மேடுகள் அமைக்க வேண்டும்.

இத்தடுப்புகளை மீறி நீர் உட்புகுந்தால், அந்நீரை வெளியேற்றும் வகையில் உயர் திறன் கொண்ட டீசல் பம்புகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

- ❖ கீழே விழும் மரங்களை உடனடியாக அகற்ற இரவு பணிக்குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உயர் கோபுர விளக்குகள் உட்பட தகுந்த உபகரணங்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- ❖ மழையினால் சேதமடையும் மின் கம்பங்கள் மற்றும் அறுந்து தொங்கும் மின் கம்பிகளை உடனடியாக சீரமைக்க சிறப்பு கண்காணிப்பு குழுக்களை ஏற்படுத்தி அப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.
- ❖ கால்நடைகளுக்கான போதிய தீவனம் மற்றும் மருந்துகள் தயார் நிலையில் இருக்க வேண்டும். கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு தேவைக்கேற்ப கால்நடை மருத்துவர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய சிறப்பு குழுக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- ❖ கழிமுகப் பகுதிகள், பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் ஆகியவற்றில் வெள்ள காலங்களில் ஏற்படும் அடைப்புகளை உடனடியாக சரிசெய்ய ஜே.சி.பி. போன்ற இயந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- ❖ நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, வெள்ள நீர் தங்கு தடையின்றி உடனடியாக செல்ல சிறு பாலங்களில் உள்ள அடைப்புகளை உடனடியாக நீக்க வேண்டும். அது மட்டமல்லாமல், தேவைப்படின் கூடுதலாக நீர் வெளியேறும் குழாய்களை அதிக கொள்ளளவுடன் சதுர வடிவில் அமைக்க வேண்டும்.
- ❖ வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் செயல்படும் மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள், 24 மணி நேரமும் செயல்பட்டு, தமிழ்நாடு அரசுக்கு அவ்வப்போது அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ மாண்புமிகு அம்மாவின் அரசு பல வெள்ளத் தடுப்புப் பணிகளை மாநிலம் முழுவதும் மேற்கொண்டுள்ளது. அதில் முக்கியமாக வெள்ள நீர் தங்கு தடையின்றி செல்ல சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் மழைநீர் கால்வாய்களை போர்க்கால அடிப்படையில் தூர் வாரும் பணிகள் பொதுப் பணித் துறை மற்றும் சென்னை மாநகராட்சி மூலம் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை துரிதமாக

முடிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டார். பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள வெள்ளத் தடுப்பு பராமரிப்பு பணிகளின் புகைப்படங்களை காண்பித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் விளக்கினார்கள்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ.சத்யகோபால், இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அசோக் டோங்ரே, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப, காவல் துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே.ராஜேந்திரன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திரு. கே.பி.மகேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு. ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் சேலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் / முதன்மைச் செயலாளர் திரு. கே.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் முதன்மைச் செயலாளர் / தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மற்றும் நீலகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.

சந்திரகாந்த் பி.காம்ப்ளே, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணண், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. மங்கத் ராம் ஷர்மா, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் திருமதி பி.அமுதா, இ.ஆ.ப., தொல்லியல் துறை ஆணையர் மற்றும் ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. டி.உதயசந்திரன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் மற்றும் தேனி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. ஏ.கார்த்திக், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. கே.பாஸ்கரன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., வருவாய் நிர்வாக ஆணையரகத்தின் இணை ஆணையர் திருமதி எம்.லஷ்மி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) திரு. மந்திரி கோவிந்த ராவ், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை முதன்மை பொறியாளர் திருமதி சாந்தி, நீர்வள ஆதாரத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் திரு. எம்.பக்தவத்சலம், நீர்வள ஆதாரத் துறை முதன்மை பொறியாளர் (சென்னை மண்டலம்) திரு. பி.ஜெயராம், நீர்வள ஆதாரத் துறை கண்காணிப்பு பொறியாளர் திரு. எம்.மணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**
**நாள்: 5.10.2018**